**கல்முனை மாநகர சபை - 2023**

---------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கல்முனை மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கல்முனை மாநகர சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) மாநகர சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் 1.6.1 மற்றும் 1.6.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் நீங்கலாக முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் குத்தகை தொடர்பாக பெறப்பட்ட நிலுவை அட்டவணையின் நிலுவைக்கும் நிதிக்கூற்றுக்களின் நிலுவைக்கும் இடையே ரூபா 16,509,211 தொகை வேறுபாடு அவதானிக்கப்பட்டிருந்தது. | இணங்காமை தொடர்பில் நம்பகத் தன்மை வாய்ந்த தகவல்கள் கிடைக்கப் பெற்றவுடன் எதிர்வரும் நிதிக்கூற்றுக் களில் சீர் செய்யப்படும். | இனங்காமைக்கான காரணங்களை விரைவாக கண்டறிந்து நிதிக்கூற்றுக்களை சீராக்குதல் வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| மீளளிக்கத்தக்க வைப்பு மீதி | 39,993,235 | விபரமான வகைப்படுத்தப் பட்ட பட்டியல் மற்றும் காலப்பகுப்பாய்வு | வைப்புப் பணங்களின் பகுப்பாய்வு தற்போது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படு கின்றது. | விபரமான வகைப்படுத்தப் பட்ட பகுப்பாய்வு அறிக்கை மற்றும் அதன் காலப்பகுப்பாய் வினை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|---|
| (அ) | 09/2009 ஆம் இலக்க 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய அரச நிருவாக சுற்றறிக்கை பந்தி 2(iv) | விடுமுறை தினக் கொடுப்பனவானது மேற்கொள்ளப்படும் போது கைவிரல் அடையாள இயந்திரத்தினை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்ட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் அதற்கு மாறாக கைவிரல் அடையாளப் பதிவின்றி ரூபா 299,107 தொகையான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கைவிரலடையாள இயந்திர உறுதிப்படுத்தலின் பின்னரே விடுமுறைக் கொடுப்பனவுகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. உத்தியோகத்தர்களுக்கு மேற்படி விடயம் அறிவுறுத்தலாக வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம், விடுமுறை தினக் கொடுப்பனவுகளை செலுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 ஆகஸ்ட் 16 ஆந் திகதிய PT/03/2021 ஆம் இலக்க கிழக்கு மாகாண நிதிச் சுற்றறிக்கை | பணம், களஞ்சிய பொருட்கள், அரசிறை அறவீடுகள் மற்றும் காசோலையில் கையொப்பமிடல் போன்ற கடமைகளுக்கு பொறுப்பாக்கப்பட்ட 10 உத்தியோகத்தரிடமிருந்து பாதுகாப்பு பிணையாக ரூபா 107,500 தொகையானது மாநகர சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப் பணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம், உரிய உத்தியோகத்தர்களிட மிருந்து பாதுகாப்பு பிணையினை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 57,284,725 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 59,202,514 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2023 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2022 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 198,100,000 | 249,180,580 | 20,905,649 | 228,274,930 | 51,730,000 | 168,405,120 | 25,401,677 | 143,003,442 |
| (ii) | வாடகை | 35,325,000 | 85,384,959 | 23,774,376 | 61,610,583 | 24,754,000 | 81,586,027 | 26,982,674 | 54,603,353 |
| (iii) | உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 19,972,500 | 8,416,456 | 8,416,456 | - | 28,310,000 | 8,283,618 | 8,283,618 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 18,170,000 | 11,121,953 | 11,121,953 | - | 67,765,000 | 14,483,818 | 14,483,818 | - |
| (v) | கூட்டுத் தொகை | **271,567,500** | **354,103,948** | **64,218,434** | **289,885,513** | **172,559,000** | **272,758,584** | **75,151,789** | **197,606,795** |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையினால் 2012 ஆம் ஆண்டின் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு ஆதனவரி அறவிடப்படுகின்றமையினால் வருமான இழப்பொன்று ஏற்படுவதுடன் மீளாய்வாண்டில் கடந்த வருட நிலுவை உட்பட ரூபா 11,893,423 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இதனை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிட வேண்டிய நிலுவை வருமானங்களினை மிக விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மாநகர சபைக்கு சொந்தமான 435 கடைகளை கடந்த 10 வருடங்களுக்கு மேலாக கேள்வி கோரி வாடகைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்காததுடன் மின் மற்றும் நீர்க்கட்டணம் தொடர்பாக உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | இவ்விடயம் முன்னுரிமைப் படுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வுள்ளது. | உரிய முறையில் கேள்வி கோரி ஒப்பந்தங்களி னை ஏற்படுத்தி வாடகைக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2021 ஆம் ஆண்டு கல்முனை பொதுச்சந்தை மற்றும் மீன்சந்தை என்பவற்றினை குத்தகைக்கு வழங்கியமை தொடர்பில் குத்தகைக்கு பெற்றவரினால் பிணை முறியானது கூட்டுறவு கிராமிய வங்கியிலிருந்து ரூபா 5,600,000 தொகைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இப்பிணைமுறியானது போலியான அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தும் அது சபையினால் சரிபார்க்காது ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்ததனால் 2024 செப்தெம்பர் 13 ஆந் திகதி வரை ரூபா 4,770,100 தொகை அறவிடப்படாது நிலுவையாகக் காணப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக எதுவித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக் குறைபாட்டினை நிவர்த்தி செய்வதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டு ள்ளது. | வருமான அறவீட்டை செய்வதற்கு தடையாக இருந்த சகல தரப்பினர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 145(1),(2) இன் பிரகாரம், அங்கீகாரம் பெறப்படாத தனியார் இறைச்சிக் கடையினை இரத்து செய்ய சட்ட நடவடிக்கை எடுக்காததுடன் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதிச் சான்றிதழ் இன்றியும், தனியார் ஒருவரினால் மடுவம் செயற்படுத்தப்படுகின்றது. சாய்ந்தமருது, நற்பிட்டிமுனை மற்றும் மருதமுனை ஆகிய பிரதேசங்களில் அறுக்கப்படும் கால்நடைகள் தொடர்பாக சபைக்கும் தனியார் இறைச்சி கடை உரிமையாளருக்கும் இடையே ஒப்பந்தம் செய்யப்படாததன் விளைவாக 2021 முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் சேகரிக்கப்பட்ட ரூபா 12,797,000 தொகையை உறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை. | தற்போது குறித்த விலங்கறுமனை க்கு சுற்றுச் சூழல் அனுமதி பெறப்பட்டு சபையின் அனுமதிக்காக விண்ணப்பித்துள்ளனர். எதிர்வரும் வருடத்திலிருந்து முறையான நடைமுறை ஒன்றைக் கடைப்பிடிப்ப தற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய அனுமதியைப் பெற்று விலங்கறுமனையை நடத்துவதுடன் அறுக்கப்படும் மாடுகள் தொடர்பான விபரங்கள் முறையாக பேணப்படுதல் வேண்டும். |
| (உ) | மாநகர சபையில் கிடைக்கக் கூடிய ஆவணங்களின் பிரகாரம், முத்திரைக் கட்டணம் தொடர்பில் 2016 தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு மாநகர சபை அனுப்பிய தொகைக்கும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட தொகைக்கும் இடையில் ரூபா 6,450,674 தொகையான வேறுபாடுகள் காணப்பட்டிருந்தும், அத்தொகைகளின் வேறுபாட்டுக்கான காரணங்களை இனங்கண்டு வருமானத்தினை பெற்றுக்கொள்வதற்கு துரிதமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முத்திரைக் கட்டணம் தொடர்பில் காணப்பட்ட வேறுபாட்டு தொகை தொடர்பில் 2024.09.24ம் திகதிய கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது | வேறுபாட்டுக் கான காரணங்களை இனங்கண்டு விரைவாக அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மாநகர சபையினால் வருமான சேகரிப்பிற்காக 2020 ஜனவரி 01 ஆந் திகதியிலிருந்து பயன்படுத்தப்பட்டு வரும் கணனி மையப்படுத்தப்பட்ட வருமான மென்முறைமையானது ஒரு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்படாமலும், பொறுப்பு வாய்ந்த தகுதியான உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தாமை, பதிவேடுகள் பேணப்படாமை, முறையான மேற்பார்வையின்மை, உயர் அதிகாரிகளின் அத்தாட்சிப்படுத்தலின்மை, உள்ளக கட்டுப்பாடு மற்றும் உள்ளக கணக்காய்வின்மை போன்றவற்றின் | நிதிப்பிரிவில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பாக கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக் கின்றது. இவ்வழக்கு முடிவற்ற பின்னர் இது தொடர்பான தகவல்கள் தங்களுக்கு அறியத்தரப்படும் | குறித்த மென்முறைமை யானது அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு, பொறுப்பு வாய்ந்த தகுதியான உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி, முறையாக பதிவேடுகளை பேணுவதுடன், மோசடிக்கு |

| | | |
|---|---|---|
| காரணமாக நாளாந்தம் அறவிடப்பட்ட வருமானங்கள் முழுமையாக மாநகர சபையின் கணக்குகளுக்கு வைப்புச் செய்யப்படாமல் இருந்ததுடன், இது தொடர்பில் கிழக்கு மாகாண உள்ளக கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரீட்சிப்பின் போது 9 வகையான வருமான மூலங்களிலிருந்து அறவீடு செய்யப்பட்டிருந்த சுமார் ரூபா 18,094,795 தொகை வைப்புச் செய்யப்படாமல் மோசடி செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 101 முதல் 110 வரையான ஏற்பாடுகளின்படி நடவடிக்கை எடுத்தமை தொடர்பான ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | வழிவகுத்த தரப்பினர்களு க்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து, இவ் இழப்பை அவர்களிடமிரு ந்து அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபையின் பயன்பாட்டிலுள்ள 05 வாகனங்கள் நீண்டகாலமாக தனியார் வாகன திருத்த நிலையங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதிலும், அதனை திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு 2024 ஒக்தோபர் 07 ஆந் திகதி வரைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக தற்பொழுது குழு ஒன்று அமைத்து திருத்தம் செய்வதற்கும், அகற்றுவதற்குமான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவ தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மாநகர சபையின் பயன்பாட்டிலுள்ள ஏனைய நிறுவனங்களின் பெயரில் காணப்படும் 13 வாகனங்களின் உரிமையினை மாநகர சபையின் பெயருக்கு மாற்றிக் கொள்வதற்கு 05 வருடங்களுக்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மாற்றம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வாகனங்களின் உரிமையினை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| சபையில் கடன் பெற்று இறந்த, ஓய்வு பெற்ற மற்றும் பதவியிலிருந்து விலகிய போன்ற காரணங்களினால் மீளாய்வாண்டில் 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 192,650 தொகையான கடன் நிலுவையினை உரிய நபர்களிடமிருந்து அல்லது பிணையாளியிடமிருந்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இறந்த உத்தியோகத்த ரின் கடன் நிலுவையினை பணிக்கொடையிலும், ஏனைய உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகள் அவர்களிடமிரு ந்து அல்லது பிணையாளிகளிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கடன் நிலுவையினை உரிய நபர்களிடமிரு ந்து அல்லது பிணையாளியிடமிருந்து அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |